# 3 நண்பனுக்கு ஒரு கடிதம்

படத்தைப் பார்ப்போம், கலந்துரையாடுவோம்.



# கடிதம் - 1

இல 19,
பிரதான வீதி,
கண்டி.
2015.06.04.

அன்புள்ள அமுதனுக்கு,

நான் நல்ல சுகம். உனது சுகம் எப்படி? உங்கள் அனைவரினதும் சுகத்திற்கு இறைவன் துணை.

நண்பா, நீ அனுப்பிய கடிதம் கிடைத்தது. பொங்கல்ப் பண்டிகை பற்றி எழுதியிருந்தாய். அறிந்துகொண்டேன். மிக்க மகிழ்ச்சி நாங்கள் அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வருவோம். எமது நண்பர்களான சுனில், சம்பத், ரகுமான், தீபன், நவா ஆகியோரும் என்னுடன் வருவார்கள். நாங்கள் அங்கு இரண்டு நாட்கள் தங்குவோம். ஏற்பாடு செய்ய முடியுமா?

யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கிய இடங்கள் எவை? அவற்றைச் சுற்றிப் பார்க்க வேண்டும். அத்தோடு உங்கள் அம்மா சமைக்கும் உணவுகளை ருசிக்க ஆவல். உனக்கு விருப்பமான சிங்கள உணவு வகைகளை எனது அம்மா செய்து தருவதாகக் கூறினார்.

கடிதம் கண்டு பதில் தொடரும்.

நன்றி ,
இப்படிக்கு,
உனது அன்பின்,
அசோக.

## செயற்பாடு - 01

1. இக்கடிதம் யாரால், யாருக்கு எழுதப்பட்டுள்ளது?
2. யாழ்ப்பாணத்திற்கு எந்த மாதத்தில் செல்ல இருக்கின் றார்கள்.
3. யாழ்ப்பாணத்திற்குச் செல்ல இருப்பவர்கள் யாவர்?
4. அசோக எதற்கு ஆவலாக இருப்பதாகக் கூறுகின்றான்?
5. சிங்கள மக்களின் உணவு வகைகள் ஐந்தினையும், தமிழர்களின் உணவு வகைகள் ஐந்தினையும் எழுதுக.

## செயற்பாடு - 02

**கடிதம் ஒன்றில் உள்ள விடயங்கள் ஒழுங்கின்றி காணப் படுகின்றன. அதனை ஒழுங்குப்படுத்தி எழுதுங்கள்.**

1. இப்படிக்கு
2. அன்புள்ள நண்பன் கமாலுக்கு,
3. நான் நல்ல சுகம் உனது சுகம் எப்படி?
4. அன்பான நண்பன் குமார்
5. இல - 24,<br>5 ஆம் ஒழுங்கை,<br>கொழும்பு.<br>2015.04.03.
6. அடுத்த மாதம் சித்திரக் கண்காட்சி இருக்கின்றது அதற்கு நீ கட்டாயம் வருகை தரவும்.

01) ______________
______________
______________
______________

02) ______________

03)
________________________________________
________________________________________

04)
________________________________________
________________________________________
________________________________________

05) ______________

06) ______________

## செயற்பாடு - 03

★ யாழ்ப்பாணத்தில் இருக்கும் நண்பராக உம்மைக்கருதி பதில் கடிதம் ஒன்றினை எழுதுங்கள்.

## செயற்பாடு - 04

**மொழி பெயர்த்து எழுதுங்கள்.**

1. *அன்புள்ள அப்பாவுக்கு.*

   ______________________________

2. *நலமறிய ஆவல்.*

   ______________________________

3. *அன்பின் நண்பன் கசுன்.*

   ______________________________

4. *உங்கள் அன்பு மகன்.*

   ______________________________

5. *என்றும் உங்கள் அன்பின்.*

   ______________________________

## கடிதம் - 2

நிமல் பண்டார
இல 28, பிரதான வீதி,
கண்டி.
2015.05.06.

ஆணையாளர்,
அரச கரும மொழிகள் திணைக்களம்,
ராஜகிரிய.

ஐயா,

**<u>''பேச்சுத் தமிழ்ப்'' பாடநெறிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக</u>**

கடந்த ஞாயிற்றுக்கிழமை வீரகேசரி பத்திரிகையில் தமிழ் மொழிப் பாடநெறி பற்றிய தங்கள் விளம்பரத்தைக் கண்டேன். மிக்க மகிழ்ச்சி.

இப்பாடநெறி பற்றி மேலும் அறிய ஆவலாக உள்ளேன். எனவே, மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் பெறவிரும்புகிறேன். அதற்கான காசுக்கட்டளையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

எனவே, அவற்றை எனது முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.
இப்படிக்கு,
உண்மையுள்ள,

________________

நிமல் பண்டார.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| ஆவல் | - | කැමැත්ත |
| ஒழுங்கை | - | පටුමග |
| சித்திரக் கண்காட்சி | - | චිත්‍ර ප්‍රදර්ශනය |
| கலை | - | කලාව |
| கலையரங்கம் | - | කලාභවන |
| சிந்தை | - | සිත |
| சஞ்சிகை | - | සඟරාව |
| விளம்பரம் | - | වෙළඳ දැන්වීම |
| அறிவியல் துணுக்குகள் | - | විද්‍යාත්මක පාඨ |
| ஆணையாளர் | - | කොමසාරිස් |
| அரச கரும மொழிகள் திணைக்களம் | - | රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව |
| பாடநெறி | - | පාඨමාලාව |
| காசுக்கட்டளை | - | මුදල් ඇණවුම් |

## செயற்பாடு - 05

**தொழில் முறைக் கடிதம் ஒன்றின் மாதிரியை அவதானியுங்கள். வாசியுங்கள்.**

அனுப்புபவரின் பெயர்/முகவரி

____________________

____________________

____________________

பெறுபவரின் பதவி, முகவரி

____________________

____________________

____________________

விளிப்பு

____________________

தலைப்பு

________________________________________________

விடயம்

________________________________________________

________________________________________________

________________________________________________

அனுப்புபவரின் கையொப்பம்.

## செயற்பாடு - 06

**கடிதத்தை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

*1. இக்கடிதத்தை எழுதியவர் யார்?*

*2. பாடநெறி பற்றிய விளம்பரம் எந்தப் பத்திரிகையில் காணப்பட்டது?*

*3. இக்கடிதம் எதற்காக எழுதப்பட்டது?*

*4. இக்கடிதத்தின் மூலமாக எதனை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்?*

## செயற்பாடு - 07

**குழம்பிக் காணப்படும் இக்கடிதத்தை ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.**

இப்படிக்கு
உண்மையுள்ள
....................
பாலன்

எம். பாலன்
இல - 15,
5ஆம் ஒழுங்கை,
கொழும்பு - 06

ஐயா, / அம்மணி,

கணக்காளர்
பதவிக்கான
விண்ணப்பப்படிவம்

தங்கள் நிறுவனத்தின்

கணக்காளர்
பதவிக்கான வெற்றிடம்
காணப்பட்டது.

பத்திரிகை
விளம்பரத்தைக்
பார்த்தேன்.

எனது விண்ணப்பப்
படிவத்தை

இத்துடன்
அனுப்பி வைக்கின்றேன்.

முகாமையாளர்,
ரஞ்சனி பிறைவட் லிமிற்றெட்,
கொழும்பு.

## செயற்பாடு - 08

**மொழி பெயர்த்து எழுதுங்கள்.**

*1.* கௌரவ அமைச்சர்.

___

*2.* அம்மணி

___

*3.* மேற்படி பெயரைக் கொண்ட

___

*4.* திகதியும், இலக்கமும் கொண்ட

___

*5.* கீழ்படிவான மாணவன்.

___

*6.* மின்சாரம் பெற்றுக் கொள்வது தொடர்பாக

___

*7.* இடமாற்றம் பெற்றுக் கொள்வது தொடர்பாக

___

*8.* தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

___

*9.* அனுமதி பெற்றுக் கொள்வது தொடர்பாக

___

*10.* தேவையான நடவடிக்கைகள்.

___

## செயற்பாடு - 09

**பின்வரும் மாதிரி சுயவிபரப்படிவத்தை அவதானமாக வாசியுங்கள்.**

**குறிப்பு -** தொழில் முறைக்கடிதங்களுடன் சில சந்தர்ப்பங்களில் சுயவிபரப் படிவமொன்றினை இணைக்க வேண்டி வரலாம். அவ்வாறான மாதிரி சுயவிபரப் படிவத்தைப் பார்ப்போம்.

### மாதிரிச் சுயவிபரப் படிவம்

| | | |
|---|---|---|
| 1. **பெயர்** | : | சந்திரன் |
| 2. **முழுப் பெயர்** | : | மாசிலாமணி சந்திரன் |
| 3. **தேசிய அடையாள அட்டை இலக்கம்** | : | 701691404 V |
| 4. **தொடர்பு இலக்கம்** | : | 077 - 4532453 |
| 5. **மின்னஞ்சல் முகவரி** | : | jaya@gmail.com |
| 6. **தனிப்பட்ட முகவரி** | : | இல 10, பிராதன வீதி, கண்டி. |
| **அலுவலக முகவரி** | : | விஷ்ணு மகாவித்தியாலயம், மட்டக்களப்பு. |
| 7. **பிறந்த திகதி** | : | 06.03.1970. |
| 8. **பால்** | : | ஆண். |
| 9. **விவாகமானவரா?** | : | ஆம். |
| 10. **கல்வித் தகைமை** | : | க.பொ.த (உ / த). |
| 11. **தொழிற் தகைமை** | : | பயிற்றப்பட்ட ஆசிரியர் (கணிதம்). |
| 12. **வேறு தகைமைகள்** | : | கணினிப் பயிற்சி டிப்ளோமா. |

மேலே குறிப்பிட்ட தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

01.01.2015
திகதி

______________
ஒப்பம்

## செயற்பாடு - 10

**பின்வரும் பந்தியை வாசித்துக் கீழ்வரும் சுயவிபரப் படிவத்தைப் பூரணப்படுத்துங்கள்.**

*இலக்கம் 10, கோவில் வீதி, வவுனியாவில் வசிக்கும் வீராசாமி இரமேஷ்குமார். இவர் வவுனியா விபுலானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். 1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் திகதி பிறந்த இவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் 751691404v ஆகும். கலைப் பட்டதாரியான இவர் ஆரம்பக் கல்வி ஆசிரியர் பயிற்சியைப் பெற்றவர். இவரை* ramesh@gmail.com *எனும் மின்னஞ்சல் முகவரியூடாகவோ அல்லது 079 4928559 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ தொடர்பு கொள்ளமுடியும்.*

1. பெயர் :
2. முழுப் பெயர் :
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
4. தொடர்பு இலக்கம் :
5. மின்னஞ்சல் முகவரி :
6. தனிப்பட்ட முகவரி :
   அலுவலக முகவரி :

7. பிறந்த திகதி :

8. பால் :

9. விவாகமானவரா? :

10. கல்வித் தகைமை :

11. தொழிற் தகைமை :

12. வேறு தகைமைகள் :

மேலே குறிப்பிட்ட தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

____________ ____________

திகதி ஒப்பம்